

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 AUGUST

மலர்: 10 இதழ் : 11 ஆகஸ்ட் 2017 விலை: ரூ. 5

## சீரழிக்கும் திரைக் கலாச்சாரம்!

- மக்கிப்போகும் வெட்க உணர்வு!
- கள்ளக்காதலுக்கு அங்கீகாரம்
- திருட்டுக்கும் கொள்ளைக்கும் அங்கீகாரம்!
- ஆடைக்குறைப்புக்கு அங்கீகாரம்!
- பெருகும் விபச்சாரம்! மது போதை!
- பாலியல் வல்லுறவுகள்!
- குடும்ப அமைப்பு சீர்குலைவு!
- மக்கள் கவனம் திசைதிருப்பும் அரசியல்!



# தீமைகளைத் தடுக்காவிட்டால் அனைவருக்கும் அழிவே!

ஒரு கப்பல் யாத்திரை...

பயணிகள் கப்பலில் ஏறக் காத்திருக்கிறார்கள். கப்பலிலோ மேல்தளம் கீழ்த்தளம் என இரண்டு தளங்கள் உள்ளன.

சரி, யாருக்கு மேல்தளம்? யாருக்கு கீழ்த்தளம்?

சீட்டு குலுக்கிப் போட்டு முடிவு செய்தார்கள் பயணிகள். அதன்படி சிலருக்கு கீழ்த்தளம் வாய்த்தது. மீதிப்பேருக்கு மேல்தளம்...

பயணம் துவங்கியது...

இப்போது கீழ்த்தளத்தில் இருந்தவர்களுக்குத் தண்ணீர் தேவைப்பட்டது. தண்ணீரைக் கொண்டு வர வேண்டுமானால் அவர்கள் மேல்த்தளத்திற்குச் சென்றாக வேண்டும். அங்கு இருப்பவர்களைக் கடந்து சென்றே தேவையான நீரை நிரப்பிக்கொண்டு வர முடியும். மேல் இருந்தவர்களுக்கும் அதனால் சிரமம் ஏற்பட்டது.

போகப்போக கீழ்த்தள பயணிகளில் ஒருவருக்கு ஒரு யோசனை உதித்தது. "நண்பர்களே! நாம் ஏன் தண்ணீருக்காக ஒவ்வொருமுறையும் மேலே செல்ல வேண்டும்? அவர்களுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டும்? நமக்குத் தேவையான நீர் இதோ கையெட்டும் தூரத்தில் இருக்கும்போது நமக்கென்ன கவலை? இதோ இந்தப் பலகையில் ஒரு சிறு ஓட்டை இட்டுக்கோள்வோம் வாருங்கள்!" தாகத்தில் சிரமப்பட்டுக் கொண்டிருந்த மற்ற கீழ்த்தள மக்களில் சிலருக்கும் அந்த யோசனை சரியென்றே பட்டது.

செய்தி மேல்தளத்தில் பயணிகளை எட்டியது.

இப்போது மேல்தள மக்கள் என்ன செய்யவேண்டும்?


அப்பாடா, இனி கீழ்த்தள மக்களின் தொல்லை இருக்காது என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டால் என்ன நடக்கும்?

கப்பல் முழுக்க நீர்புகுந்து மேல்தளப் பயணிகளும் கீழ்த்தளப் பயணிகளும் ஒரேயடியாக மூழ்கிப் போய்விடுவார்கள்!

மாறாக வரக்கூடிய ஆபத்தை உணர்ந்து ஓட்டையிடப் போகும் கீழ்த்தளத்து மக்களைத் தடுத்தால் அனைவரும் ஆபத்திலிருந்து காப்பாற்றப் படுவார்கள்!

இதுதான் இறைவன் விதித்த சட்ட வரம்புகளுக்குக் கட்டப்பட்டு நடப்பவர்களும் அவற்றை மீறி நடப்பவர்களுக்கும் உள்ள உதாரணம் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதார ஹதீஸ்கள்: புகாரி, திர்மிதீ)



மேற்படி உவமைப்படி சமூகத்தில் நடக்கும் தீமைகளைக் கண்டும் காணாமல் நல்லோர்கள் விட்டுவிட்டால் அனைவருமே அழிவுக்குள்ளாகும் வாய்ப்பு உள்ளது.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 AUGUST**

மலர்: 10 இதழ் : 11 ஆகஸ்ட் 2017 விலை: ரூ. 5

**பொருளடக்கம்**

உண்மைகளைப் பின்பற்றுவோரும் ஊகங்களைப் பின்பற்றுவோரும் -2
தடுக்காவிடில் தீமைகள் வளரவே செய்யும்! -5
நமது சம்பாத்தியம் அனுமதிக்கப்பட்டதா இல்லையா? -7
மக்கிப் போகும் வெட்க உணர்வு! -8
வாசகர் எண்ணம் -11
சீரழிக்கும் திரைக் கலாச்சாரம்! -12
வணக்கசாலி பார்சிசா வீழ்ந்த கதை! -17
சத்தியத்தை நோக்கிய என் பயணம் -21
நீ பிறந்தது எதற்காக? -23

உங்கள் முகங்களை கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திருப்புவது நன்மையன்று. மாறாக அல்லாஹ், இறுதி நாள், வானவர்கள், வேதம், மற்றும் நபிமார்களை நம்புவோரும் உறவினர்கள், அனாதைகள், ஏழைகள், நாடோடிகள், யாசிப்போர், மற்றும் அடிமைகளை விடுதலை செய்வதற்கு (மன) விருப்பத்துடன் செல்வத்தை வழங்குவோரும், தொழுகையை நிலை நாட்டுவோரும், ஸகாத்தை வழங்குவோரும், வாக்களித்தால் தமது வாக்கை நிறைவேற்றுவோரும், வறுமை, நோய், மற்றும் போர்க்களத்தில் சகித்துக் கொள்வோருமே நன்மை செய்பவர்கள். அவர்களே உண்மை கூறியவர்கள். அவர்களே (இறைவனை) அஞ்சுபவர்கள். (திருக்குர்ஆன் *2:177*)

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# உண்மைகளைப் பின்பற்றுவோரும் ஊகங்களைப் பின்பற்றுவோரும்

## உண்மைகளைப் பின்பற்றுவோர் நிலை

மனிதர்களைப் பற்றி அவர்களையும் இப்பிரபஞ்சத்தையும் படைத்தவன் என்ன கூறுகிறானோ அதுவே முழுமையான உண்மை ஆகும். அவனுக்கு மட்டுமே மனிதனைப் பற்றிய முழுமையான அறிவும் மனித வாழ்வின் நோக்கமும் ஆரம்பமும் முடிவும் என அனைத்தும் பக்குவமாகத் தெரியும். எனவே அந்த இறைவனையும் அவனது வழிகாட்டுதலையும் பின்பற்றி வாழ முற்படுவோருக்கு வாழ்க்கை ஒரு உறுதியான அஸ்திவாரத்தின் மேல் அமைகிறது.

'கலிமா தய்யிபா' என்றால் இஸ்லாத்தின் மூலமந்திரமான 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்பதைக் குறிக்கும். அந்த நல்வாக்கியத்தின் பொருள் 'வணக்கத்துக்கு உரியவன் படைத்த இறைவனைத்தவிர யாருமே இல்லை' என்பது. இதன் சிறப்பைப் பற்றி இறைவன் தன் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்:

- **(கலிமா தய்யிபா எனும்) நல்வாக்கியத்திற்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் கூறுகிறான் என்பதை (நபியே!) நீர் கவனிக்கவில்லையா? அது மணம் மிக்க ஒரு நன்மரத்தைப் போன்றது. அதனுடைய வேர்கள் (பூமியில் ஆழமாகப்) பதிந்ததாகவும் அதன் கிளைகள் வானளாவியும் இருக்கும்.**

**அது தன்னுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு ஒவ்வொரு காலத்திலும் தன்னுடைய கனியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. மக்கள் நல்லுணர்வு பெறும் பொருட்டு அல்லாஹ் (இத்தகைய) உதாரணங்களைக் கூறுகிறான் (திருக்குர்ஆன் 14:24.-25)**

அதாவது இந்த உறுதிமொழியை அடிப்படையாகக்கொண்ட உண்மையான இறைக்கோட்பாடும், முறையான மறுமை நம்பிக்கையும் மக்கள் உள்ளத்தில் விதைக்கப் படுமானால் அது சமூகத்திற்கு அள்ளி வரும் நன்மைகள் ஏராளம் ஏராளம்! இந்தச் சொல் உறுதியாக இவ்வுலக மக்களால் பின்பற்றப் பட்டால்- அதாவது இந்த உறுதிமொழியை மக்கள் மொழிந்து அதன்படி நடப்பார்களேயானால் அங்கு ஆக்கபூர்வமான சமூகப் புரட்சிகள் ஏற்படும். தனிநபர் நல்லொழுக்கம், மனித சமத்துவம், சகோதரத்துவம், மனித உரிமை மீட்பு, சுயமரியாதை மீட்பு, பெண்ணுரிமைகள் மீட்பு, பெண்சிசுக்கொலை ஒழிப்பு, வரதட்சணை ஒழிப்பு, பாலியல் கொடுமைகளில் இருந்து பாதுகாப்பு, விபச்சார ஒழிப்பு, குடும்ப அமைப்பின் பாதுகாப்பு, வட்டி ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, இடைத்தரகர் ஒழிப்பு மூடநம்பிக்கை ஒழிப்பு ஆன்மீகத்தின் பெயரால் ஆதிக்கம் ஒழிப்பு, ஆன்மீகத்தின் பெயரால்



சுரண்டல் ஒழிப்பு போன்ற பற்பல நன்மைகள் சமூகத்தில் உண்டாகின்றன. அது மட்டுமல்லாமல் இதன் அடிப்படையில் இவ்வுலக வாழ்வைக் கழித்தவர்களுக்கு பரிசாக மறுமையில் சொர்க்கம் என்ற நிரந்தர இன்பங்கள் நிறைந்த வாழ்விடமும் கிடைக்கிறது.

● **22:23. இறைநம்பிக்கை கொண்டு யார் நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ் சுவனபதிகளிலே புகுத்துவான். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டேயிருக்கும் அங்கே பொன்னாலான கடகங்களிலிருந்தும், முத்திலிருந்தும் ஆபரணங்கள் அணிவிக்கப்படுவார்கள் அங்கு அவர்களுடைய ஆடைகளும் பட்டாக இருக்கும்.**

**22:24. ஏனெனில் அவர்கள் (கலிமா தையிபா எனும்) பரிசுத்தமான சொல்லின் பக்கம் (இம்மையில்) வழிகாட்டப்பட்டிருந்தார்கள். இன்னும் புகழுக்குரிய (இறை)வனின் பாதையின் பக்கமும் அவர்கள் செலுத்தப்பட்டிருந்தார்கள்.**

## ஊகங்களைப் பின்பற்றுவோர் நிலை

மாறாக இம்மாபெரும் பிரபஞ்சத்தில் உள்ள ஒரு அற்பக் கோளான பூமியின்மேல் ஆறடி உயரம் நின்றுகொண்டு அனைத்தையும் அறிந்தவர்களைப் போலப் பிதற்றும் சில அற்ப மனிதர்களின் ஊகங்களையும் பொய்களையும் அல்லது அவர்கள் வகுத்த இசங்களையும் கொள்கைகளையும் பின்பற்றுவோரால் ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடவோ மக்களிடையே பயனுள்ள சீர்திருத்தங்கள் மேற்கொள்ளவோ முடிவதில்லை. ஒரு உறுதியான நிலையான கொள்கை இல்லாமையால் அவர்களால் இனம், மொழி, இடம், நிறம் போன்றவற்றால் இயல்பாகவே பிரிந்து நிற்கும் மக்களிடையே பிணைப்பை ஏற்படுத்தவோ முடிவதில்லை. இறைவன் தன் தூதர்கள் மூலமாகவும் வேதங்கள் மூலமாகவும் மனித குல நன்மைக்காக போதிக்கும் உண்மைகளை மறுத்து இவர்களாகவே உண்டாக்கிக்கொண்ட இசங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் பூமியில் நிலைத்து நிற்கும் தன்மை கிடையாது. அவை தற்காலிகமாக வெற்றி பெறுவதைப் போல ஒரு மாயையை உண்டாக்கினாலும் காலப்போக்கில் அழிந்து விடுவதையே நாம் காணமுடிகிறது.

● **14:26. (சத்தியத்தை மறுபோரின்) கெட்ட வாக்கியத்திற்கு உதாரணம் கெட்ட மரமாகும் பூமியின் மேல் பாகத்திலிருந்தும் (அதன் வேர்) பிடுங்கப்பட்டிருக்கும் அதற்கு நிலைத்து நிற்கும் தன்மையுமில்லை.**

● **14:27. எவர்கள் இறைநம்பிக்கை கொள்கிறார்களோ அவர்களை இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் உறுதியான சொல்லைக் கொண்டு அல்லாஹ் உறுதி படுத்துகின்றான் - இன்னும், அநியாயக் காரர்களை அல்லாஹ் வழி தவறச் செய்து விடுகிறான் மேலும் அல்லாஹ், தான் எதை நாடுகின்றானோ அதைச் செய்கின்றான்.**

(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்பது பொருள்.

இவ்வுலகில் அவர்கள் தங்கள் இசங்களை நம்பி இறைமறுப்பைக் கைக்கொள்வதால் அவர்களுடைய மறுமை வாழ்க்கை மிகவும் பரிதாபத்துக்குரியதாக ஆகிவிடுகிறது. இவ்வுலகில் அவர்களுக்கு மறுமையைப் பற்றியும் அங்கு நடக்கவுள்ள நீதி விசாரணை பற்றியும் சொர்க்கம் மற்றும் நரகம் பற்றியும் அவர்களுக்கு நினைவூட்டப்பட்டால் அவற்றை அவர்கள் பரிகாசமாகவே எடுத்துக் கொள்கிறார்கள்.

இவ்வுலகைப் படைத்தவன் அவர்களைப் பற்றி தன் வேதத்தில் இவ்வாறு

*கூறுகிறான்:*

**● 45:7. (சத்தியத்தை புறக்கணித்துப்) பொய்க் கற்பனை செய்யும் பாவிகள் யாவருக்கும் கேடுதான்.**

**45:8. தன் மீது ஓதிக்காட்டப்படும் அல்லாஹ்வுடைய வசனங்களைக் கேட்கிறான். பின்பு பெருமையடித்துக் கொண்டு அவன் அதைக் கேளாதது போல் (தன் நிராகரிப்பில்) பிடிவாதம் செய்கிறான். அ(த்தகைய)வனுக்கு நோவினை செய்யும் வேதனையைக் கொண்டு நன்மாராயம் கூறுவீராக.**

**45:9. நம் வசனங்களிலிருந்து ஏதாவது ஒன்றை அவன் அறிந்து கொண்டால், அதைப் பரிகாசமாக எடுத்துக் கொள்கிறான் அ(த்தகைய)வர்களுக்கு இழிவு தரும் வேதனையுண்டு.**

**45:10. அவர்களுக்கு முன்னால் நரகம் இருக்கிறது அவர்கள் சம்பாதித்துக் கொண்டதில் எப்பொருளும் அவர்களுக்குப் பயன் தராது. அல்லாஹ்வையன்றி, எவற்றை அவர்கள் பாதுகாவலர்களாக எடுத்துக் கொண்டார்களோ அவையும் (அவர்களுக்குப் பயன் தராது) மேலும், அவர்களுக்கு மாபெரும் வேதனையுமுண்டு.**

*ஒவ்வொரு காலகட்டத்துக்கும் இறைவன் தனது வழிகாட்டுதலை தன் தூதர்கள் மூலமாகவும் வேதங்கள் மூலமாகவும் அனுப்பி உள்ளான். இவற்றைப் பின்பற்றி அதனடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்களுக்கு சொர்க்கமும் மறுப்போருக்கு நரகமும் மறுமையில் விதிக்கப்படுகின்றன. அந்தவகையில் இன்று வாழும் மக்களுக்காக அனுப்பப்பட்ட வேதமே இறுதி இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மூலமாக அனுப்பப்பட்ட திருக்குர்ஆன்! அதையே உறுதியான மொழிகளில் சொல்கிறான்:*

**● 45:11. இது (குர்ஆன்)தான் நேர்வழிகாட்டியாகும். எவர்கள் தம்முடைய இறைவனின் வசனங்களை நிராகரித்து விட்டார்களோ, அவர்களுக்கு நோவினை மிகுந்த கடினமான வேதனையுண்டு.**

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

● *இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு* SMS *அனுப்பவேண்டும்.*

● *மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள்* SMS *மூலம்* RESEND QNM *என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.*

● *முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.*

● *ஓராண்டு சந்தா :* Rs. 60- ● *ஈராண்டு சந்தா* Rs.120-

● *இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்:* **09845373775 / 09886001357**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross,Syed Block, AS palya
Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# தடுக்காவிடில் தீமைகள் வளரவே செய்யும்!

இஸ்லாம் மார்க்கத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு முழுமையான வாழ்க்கை நெறி. வெற்று ஆன்மீக சடங்குகளை மட்டும் பின்பற்றி மக்களில் இருந்து தூர விலகி துறவறம் மூலம் மோட்சம் பெறலாம் என்று அது ஒரு போதும் போதிக்க வில்லை. மாறாக மக்களோடு மக்களாக வாழ்ந்து இறைவன் கூறும் எவல்விலக்கல்களை ஏற்று அதன்படி சமூகப் பொறுப்புணர்வோடு வாழ்வதையே வழிபாடு என்று போதிக்கிறது இஸ்லாம். சமூகத்தில் நன்மையை ஏவுவதும் அங்கு நடைபெறும் தீமைகளை விலக்குவதும் இறைவனின் எவல்களில் முக்கியமானவை.

● **“நன்மையை ஏவி, தீமையை விட்டும் (மனிதர்களை) விலக்குவாயாக“ திருக்குர்ஆன் 31:17)**

● **“நன்மையைக் கொண்டே தீமையைத் தடுத்துக் கொள்வார்கள்“ (திருக்குர்ஆன் 13:22)**

## கண்டும் காணாமல் போவது தீமைக்கு அங்கீகாரம்!

● இறைநம்பிக்கையாளர்களை நோக்கி நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், ”உங்களில் ஒருவர் ஒரு தீமையை கண்டால் தன் கையால் அதைத் தடுக்கட்டும், அதற்கு இயலாவிட்டால் தன் நாவால் தடுக்கட்டும்.அதற்கும் இயலாவிட்டால் தன் இதயத்தால் (வெறுக்கட்டும்) இது இறைநம்பிக்கையில் மிக பலவீனமான நிலையாகும்”.

(அறிவிப்பாளர்: அபூஸயீத் அல் குத்ரீ (ரலி) நூல்: முஸ்லீம்)

இறைநம்பிக்கை கொண்ட நல்லோர்கள் இந்த நபிமொழி உரிய முறையில் செயல்படுத்தாது மெத்தனமாக இருப்பது சமூகத்தில் தீமைகள் பெருக்கத்திற்கும் வெட்க உணர்வு மழுங்கிப் போவதற்கும் ஒரு முக்கியமான காரணம் ஆகும்.

கையால் தடுக்க அதிகாரம் கொண்ட நல்லவர்கள் ஒரு தீமையைக் காணும்போது அதைக் கண்டு மெத்தனமாக இருந்தாலும் அல்லது நாவால் தடுக்க முடிந்த இடத்தில் அத்தீமைக்கு எதிராக குரல்கொடுக்காமல் போனாலும் தீமையில் மூழ்கி இருப்பவர்கள் அத்தீமைக்கு அந்த நல்லோரின் அங்கீகாரம் கிடைத்ததைப் போல் எடுத்துக் கொள்கிறார்கள்.

உதாரணமாக டிவியில் கள்ளக்காதல், திருட்டு, வஞ்சனை போன்றவற்றை நியாயப் படுத்தும் காட்சிகள் சர்வ சாதாரணமாக ஒளிபரப்பப்படுவதை நாம் அறிவோம். அவ்வாறு கலாச்சார சீர்கேடுகளையும் அத்துமீறல்களையும் வீணானவற்றையும் பொய்களையும் ஆபாசமான காட்சிகளையும் டிவி மூலம் அவர்கள் நம் வீடுகளுக்குள் பரப்பும்போது அவற்றை இரசிப்பதில் வீட்டு அங்கத்தினர்கள் ஈடுபட்டால் அங்கு குடும்பத்தலைவர் அல்லது பொறுப்பாளி அதிலிருந்து அவர்களை கையால் தடுக்கவோ அல்லது வாயால் தடுக்கவோ செய்யவேண்டும். ஒரு பொறுப்புணர்வுள்ள குடும்பத்தலைவர் இறைவன் தனது தூதர் மூலமாக கற்பித்துள்ளதை நினைவு கூர வேண்டும்.

● இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“நினைவில் கொள்க! நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே. உங்களில் ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்பிலுள்ளவை பற்றி

(மறுமையில்) விசாரிக்கப்படுவீர்கள். ஆட்சித் தலைவர் மக்களின் பொறுப்பாளராவார். அவர் தம் குடிமக்கள் குறித்து விசாரிக்கப்படுவார். ஆண், தன் குடும்பத்தாருக்குப் பொறுப்பாளன் ஆவான். அவன், தன் பொறுப்புக்குட்பட்டவர்கள் குறித்து விசாரிக்கப்படுவான். பெண், தன் கணவனின் வீட்டாருக்கும், அவனுடைய குழந்தைக்கும் பொறுப்பாளி ஆவாள். அவள் அவர்கள் குறித்து விசாரிக்கப்படுவாள். ஒருவரின் பணியாள் தன் எசமானின் செல்வத்திற்குப் பொறுப்பாளியாவான். அவன் அது குறித்து விசாரிக்கப்படுவான். நினைவில் கொள்க! உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே! உங்களில் ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்புக்குட்பட்டவை குறித்து விசாரிக்கப்படுவீர்கள்." (நூல்: புகாரி 7138)

குடும்பத் தலைவர் அல்லது தலைவி தம் பொறுப்பை உணர்ந்து கண்முன் நடக்கும் தீமைகளைத் தடுக்காமல் போனால் என்ன நடக்கிறது என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். மற்ற குடும்ப அங்கத்தினர்களால் அவர்கள் செய்துகொண்டிருக்கும் தீமையில் குற்றம் ஏதும் இல்லை என்கிற மனோபாவத்தையே அது ஏற்படுத்துகிறது. அந்த மெத்தனம் குறிப்பாக குழந்தைகளிடம் தவறான தாக்கத்தை உண்டாக்குகின்றது. டிவி காட்சிகளில் நியாயப்படுத்தப் படும் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவுகளும் கள்ளக்காதல் விவகாரங்களும் ஆபாசங்களும் திருட்டு, கொள்ளை போன்ற தீய பண்புகளும் பெரும் பாவங்களே என்ற உணர்வே இல்லாமல் இளைய தலைமுறை வளர்கிறது. தடுக்கவேண்டிய பருவத்தில் தீமைகளைத் தடுக்காவிட்டால் அவை வளர்ந்து நாளடைவில் பூதகரமாக உருவெடுக்கின்றன. பிள்ளைகள் வளர்ந்து பெரிதாகும்போது அதே பாவங்களில் சர்வசாதாரணமாக ஈடுபடுகின்றன. கலாச்சார சீர்கேடுக்கள் நம் குடும்பங்களுக்குள்ளும் நுழைந்து நமது குடும்ப அமைதியையும் சமூக அமைதியையும் கேள்விக்குறியாக்குகின்றன.

நன்மைகளைச் செய்வதோடு தீமைகளையும் களைய முன் வர வேண்டும். தான் மட்டும் நல்லவனாக வாழ்ந்தால் போதும் மற்றவர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன? என்றிருப்பவர் தீமையைத் தடுத்தவராகமாட்டார்.

## தீமைகளைத் தடுக்காதவர்களும் தீயவர்களோடு அழிக்கப்படுதல்

நபிகள் நாயகம் அவர்களுக்கு முந்தைய காலகட்டத்தில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி இறைவன் தன் திருமறையில் கூறுகிறான்:

- **"அல்லாஹ் அழிக்கப் போகின்ற அல்லது கடுமையாகத் தண்டிக்கப் போகின்ற கூட்டத்திற்கு ஏன் அறிவுரை கூறுகிறீர்கள்?" என்று அவர்களில் ஒரு சாரார் கூறினர். அதற்கவர்கள் "உங்கள் இறைவனிடமிருந்து (விசாரணையின் போது) தப்பிப்பதற்காகவும், அவர்கள் (இறைவனை) அஞ்சுவோராக ஆவதற்காகவும் (அவர்களுக்கு அறிவுரை கூறுகிறோம்)" என்று கூறினர். (திருக்குர்ஆன் 7:164)**

**"அவர்கள் எது குறித்து உபதேசிக்கப் பட்டார்களோ, அதனை அவர்கள் மறந்து விட்டபோது, அவர்களைத் தீமையைவிட்டு விலக்கிக் கொண்டிருந்தவர்களை நாம் காப்பாற்றினோம். வரம்பு மீறி அக்கிரமம் செய்து கொண்டிருந்தவர்களுக்கு, அவர்கள் செய்து வந்த பாவத்தின் காரணமாக கடுமையான வேதனையைக் கொடுத்தோம்" (திருக்குர்ஆன்**

7:165)

மேற்படி வசனங்களில் தீமையைத் தடுத்தவர்கள் மட்டுமே காப்பாற்றப்பட்டார்கள் என்றும், தீமையைச் செய்தவர்களும், அதைத் தடுக்காமல் வேடிக்கைப் பார்த்தவர்களும் தண்டிக்கப்பட்டார்கள். என்றும் கூறப்படுகிறது. நல்லவன் என்பது தாமும் நல்லவனாக வாழ்ந்து, வலிமைக்கேற்றவாறு தீமையைத் தடுக்கவும் வேண்டும்.

● "எனது உயிர் எவனது கையில் உள்ளதோ அவன் மேல் ஆணையாக நீங்கள் நன்மையை ஏவுங்கள், தீமையைத்தடுங்கள் (தவறினால்) அல்லாஹ் தண்டனையை உங்களுக்கு அனுப்புவான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதீ)

தீமையைத் தடுக்காதவர் நல்லவனாக வாழ்ந்தும் புண்ணியமில்லை, அவர் தண்டனைக்குரியவர் என இன்னும் பல கருத்துக்களில் இஸ்லாம் உரைக்கின்றது.

# நமது சம்பாத்தியம் அனுமதிக்கப்பட்டதா இல்லையா?

நாம் ஒவ்வொருவரும் சுயப்பரிசோதனை செய்யக் கடமைப்பட்டுள்ளோம். தமது குடும்பத்திற்காக உழைப்பவர்கள், தாம் ஈட்டும் பொருளாதாரம் ஹலாலானதா (அனுமதிக்கப்பட்டதா) இல்லையா என்பதை யோசிக்க வேண்டும். இறைவன் தடை செய்த வழிகளில் பொருளாதாரத்தை தேடினால் அதற்கு இறைவனிடமிருந்து தண்டனையும் கிடைக்கும், நம்முடைய பிரார்த்தனைகளும் ஏற்றுக்கொள்ளப் பட மாட்டாது.

● ஒருமுறை இறைத் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்... "அல்லாஹ் தூய்மையானவன். தூய்மையானதைத் தவிர வேறு எதையும் அவன் ஏற்றுக் கொள்ளமாட்டான். அல்லாஹ் நபிமார்களுக்கு எதை ஏவினானோ அதையே விசுவாசிகளுக்கும் ஏவுகின்றான் என்று கூறி விட்டு,

**"தூதர்களே! தூய்மையானவற்றை உண்ணுங்கள்! நல்லறம் செய்யுங்கள்! நீங்கள் செய்வதை நான் அறிந்தவன்" (அல்குர்ஆன் 23:51)**

**"நம்பிக்கை கொண்டோரே! நாம் உங்களுக்கு வழங்கிய தூய்மையானவற்றை உண்ணுங்கள்! நீங்கள் அல்லாஹ்வையே வணங்குவோராக இருந்தால் அவனுக்கே நன்றி செலுத்துங்கள்!" (அல்குர்ஆன் 2:172)**

ஆகிய இறைவசனங்களை ஓதிக் காட்டினார்கள்.

பின்பு ஒரு மனிதரைப் பற்றி குறிப்பிட்டார்கள்.



● "அவனோ நீண்ட தூரம் பயணத்தில் இருக்கின்றான். அவனுடைய தலை புழுதி படிந்து பரட்டையாக இருக்கின்றது. அவன் வானத்தின் பால் கைகளை உயர்த்தி, எனது இறைவனே! எனது இறைவனே! என்று அழைக்கின்றான். அவனது ஆடை, அவனது உணவு, அவனது குடிப்பு ஆகிய அனைத்தும் ஹராமாக இருக்கின்றது. அவனே ஹராமில் மூழ்கி விட்டான். இந்த நிலையில் அவனது துஆ (பிரார்த்தனை) எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும்?" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: முஸ்லிம்

# மக்கிப் போகும் வெட்க உணர்வு!

ஒருகாலத்தில் ஆண்களை வசீகரிக்க விலைமாதர்கள் அணிந்து நடந்த அரைகுறை ஆடைகளை இன்று குடும்பப்பெண்கள் உட்பட பரவலாக அணிந்து எந்த ஒரு கூச்சமோ குற்ற உணர்வோ இன்றி பெண்கள் நடமாடுவது வெட்க உணர்வு அழிந்து வருகிறது என்பதை நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. உடலின் எந்த பாகங்களை மணமுடித்த தங்கள் கணவனுக்கு மட்டும் காட்டினார்களோ அந்த பாகங்களை இன்று குடும்பப்பெண்கள் இலைமறைக்காயாகவோ இறுக்கமான உடை அணிந்தோ அல்லது திறந்தோ கூடப் பொதுமக்களுக்கு காட்சிப்பொருளாக வைப்பது திருமணம் என்ற புனித ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். விலைமாதர்கள் தங்கள் உடலைக் காட்சிப் பொருளாக்குவது வாடிக்கையாளர்களைக் கவருவதற்காகவே என்பதில் சந்தேகமில்லை. இனிப்புப் பண்டங்களை ஷோகேஸில் வைத்து எப்படி வெளிச்சம்போட்டுக் காட்டி வாடிக்கையாளர்களை ஈர்கிறார்களோ அவ்வாறு குடும்பப் பெண்கள் தங்களின் உடலின் பாகங்களை காட்சிப் பொருளாக்க வேண்டியதன் அவசியம் என்ன?


## ஆண்களின் ஆடையும் பெண்களின் ஆடையும்

ஆண்களின் உடைகள் உடலை முழுமையாக மறைக்கும் வண்ணமும் உடலோடு ஒட்டாமல் காற்றோட்டம் உள்ளவையாகவும் ஆரோக்கியமானவையாகவும் காண்கிறோம். ஆனால் ஆண்களை விட பலவீனமானதும் மென்மையானதும் கவர்ச்சிகரமானதும் ஆன உடலமைப்பு கொண்ட பெண்கள் அணியும் ஆடைகள் பலவிதமான ஜன்னல்களோடும் உடலோடு இறுக்கமாக ஒட்டியவையாகவும் நீளம் குறைந்தவையாகவும் கைகால்கள் இல்லாதவை யாகவும் இருப்பதைக் காண்கிறோம். சிறுவயது குழந்தைகளின் உடையில் உட்பட, ஏன் பள்ளிக்கூட சீருடைகளில் கூட இந்த ஆடைக் குறைப்பு பின்பற்றப்படுவதைக் கண்டுவருகிறோம். குறிப்பாக சில ஆன்மீக அல்லது மத அமைப்புகள் நடத்துகின்ற கல்விக்கூடங்களில் பெண்களின் ஆடைகுறைப்பை சட்டம் போட்டு நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் என்பது மிகவும் ஆச்சரியமான ஒன்று! இந்த வித்தியாசத்திற்கு என்ன காரணம்?



## காற்றோட்டத்திற்கான ஜன்னல்களா?

இவை உஷ்ணத்தைத் தாங்கமுடியாததால் காற்றோட்டத்திற்காக திறக்கப்பட்ட ஜன்னல்களா? துணிப் பற்றாக்குறை காரணமாக அவ்வாறு தைக்கப்பட்டனவா? அல்லது வறுமை காரணமா? ...இப்படி இதற்கான பதிலை எப்படி சிந்தித்தாலும்



இவை எதுவுமே அல்ல என்பதை நாம் அறிவோம். ஆனால் நாம் ஒரேயொரு காரணத்தை மட்டும் உறுதியாக சொல்ல முடியும்.... அது என்ன?

ஆம், பெண்ணின் கவர்ச்சிகரமான உடல் உறுப்புக்கள் பொது மக்களின் அதாவது அந்நிய ஆண்களின் பார்வைக்கு விருந்தாக வேண்டும் என்ற ஒரே நோக்கமே இதன் பின்னணியில் உள்ளது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை! பெண் என்பவள் பலவீனமானவள், அவளது உடலின் கவர்ச்சி கண்டு ஏதாவது அந்நிய ஆண் ஈர்க்கப்பட்டால் அங்கு அவளது கற்பும் தொடர்ந்து உயிரும் பறிபோக வாய்ப்பு உண்டு என்பதை நாம் அனைவரும் அறிந்தே இருக்கிறோம். அதனால் இந்த விதமான ஆடைகள் பாதுகாப்பு அற்றவை என்பதை நிரூபிக்க சான்றுகள் தேவையில்லை. அன்றாடம் தொடர்ந்து அதிகரித்துவரும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களே இதை உறுதிப்படுத்துகின்றன.

● தேசிய குற்றவியல் பதிவகத்தின் (NCRB) தரும் புள்ளிவிவரப்படி நம் நாட்டில் ஒவ்வொரு நாளும் 95 பெண்கள் கற்பழிக்கப் படுகிறார்கள். அதாவது ஒவ்வொரு ஒரு மணிக்கு சுமார் நான்கு பெண்கள் வீதம் இதற்கு பலியாகிறார்கள். (இது காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கணக்குப்படி! பதிவுக்கு வராத கணக்கை நீங்களே ஊகிக்க முடியும்.) இந்த குற்றங்களுக்குப் பின்னால் பல காரணங்கள் இருந்தாலும் பெண்களின் ஆடைக்குறைப்பு ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

● நமது மகளோ அல்லது உடன்பிறந்த சகோதரியோ அல்லது பெற்றெடுத்த தாயோ அல்லது கட்டிய மனைவியோ மேற்கூறப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகக் கூடாது என்பதில் நாம் குறியாக இருக்கிறோம். நமது குடும்ப அமைப்பு சீர்குலையக் கூடாது என்பது நம்மில் ஒவ்வொருவரதும் விருப்பம். நமது குடும்பத்து பெண்கள் யாரும் அந்நியரால் காதலிக்கப் படுவதையோ அவர்களோடு ஓடிப் போவதையோ கற்பழிக்கப்படுவதையோ அந்நியனின் கர்ப்பத்தை சுமப்பதையோ நம்மில் பொறுப்புணர்வு கொண்ட யாருமே விரும்பமாட்டோம். “விருப்பம்போல் ஆடை அணிவது பெண்களின் உரிமை!“ என்று வாய்கிழியப் பேசும் பெண்ணுரிமை வாதிகளாக இருந்தாலும் மாதர் சங்கங்களின் பொறுப்புதாரிகளாக இருந்தாலும் தங்கள் குடும்பத்தினர் விடயத்தில் இதை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பதை நன்றாகவே நாம் அறிவோம். ஆக, யாருமே இது நம் குடும்பத்தில் நடைபெறுவதை விரும்பாவிட்டாலும் இத்தீமைக்கு முக்கிய காரணமான ஆடைக்குறைப்பை ஏன் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம்?

## பெண்ணுரிமைவாதிகள் மௌனம்

● பொதுவாகவே நமக்கு சொந்தமான ஒரு விலைமதிப்புள்ள ஒரு பொருளையோ அல்லது பணத்தையோ வெளியே எடுத்துச் செல்லவேண்டி வந்தால் அதை பத்திரமாக பொதுமக்கள் பார்வையில் படாமல் இருக்க மறைத்துதான் எடுத்துச் செல்வோம். காரணம் அதைக் கவர்ந்தெடுக்க கள்வர்கள் வெளியே காத்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். இங்கு நம் அன்புக்குரியவர்களின் உடலை காட்சிக்கு வைத்து காமுகர்களுக்கு அழைப்பு கொடுப்பதுபோலல்லவா

அமைகிறது பெண்களின் ஆடை? இவ்வாறு நம் பணத்தை விட,செல்வத்தை விட விலைமதிக்கமுடியாத நம்மவர்களின் கற்பையும் உயிரையும் துச்சமாகக் கருதச் செய்வது எது?

இவ்வாறு நமக்கும் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பெரும் ஆபத்தானது என்று அறிந்தும் பெண்களின் ஆடைக்குறைப்புக் கலாச்சாரத்தைக் கட்டுப்படுத்த ஏன் சமூக ஆர்வலர்கள் யாரும் முன்வருவதில்லை? பொதுமக்களும் அரசாங்கமும் சரி யாருமே இதில் அக்கறை காட்டுவதில்லை? தனிமனிதர்களும் ஆன்மீக தலைவர்களும்கூட மௌனம் சாதிக்கிறார்கள்?

உண்மையில் பெண் என்பவள் ஆணைவிட பாதுகாப்பாக ஆடை அணியவேண்டியவள். ஆனால் புதுமைக் கலாச்சாரத்தின் பெயரிலும், கவர்ச்சி மாயை ஊட்டியும் போலியான “பெண்ணுரிமை“ என்ற பெயரிலும் மூளைசலவை செய்து அவளை துகிலுரித்து காட்சிப்பொருளாக்கியும் கடைச்சரக்காக்கியும் மாற்றுகிறான் ஷைத்தான்! அதற்கு ஏற்ப பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் சினிமாக்களும் பெண்ணின் ஆடைகளுக்கான இலக்கணங்களை வடித்துக் கொடுகின்றன. வெட்க உணர்வுகளும் நீதி நியாயங்களும் மழுங்கடிக்கப்பட்டு அவற்றை அப்படியே மறுகேள்வி கேட்காமல் மக்கள் பின்பற்ற குடும்பத்தின் புனிதம் காற்றில் பறக்கின்றது.... சமூகத்தில் கள்ளக்காதல்களும் கற்பழிப்புகளும் கொலைகளும் கருக்கொலைகளும் தந்தைகள் இல்லா தலைமுறைகள் வளர்வதும் சகஜமாகின்றன. அவனது சதிவலையில் சமூகமும் தம்மையறியாமலே வீழ்ந்து மக்கள் தங்கள் இம்மை வாழ்வின் மகிமையையும் தொலைத்துவிட்டு மறுமை வாழ்வையும் கேள்விக்குறியாக்கி வருகிறார்கள்.

### உலகின் விபரீதப் போக்கை மாற்றுவோம் வாரீர்!

மக்களின் இந்த விபரீதமான போக்கை மாற்றி அமைக்கவேண்டிய பொறுப்பு இறைவிசுவாசிகளைச் சார்ந்தது. ஆம் அன்பர்களே, இது இறைவனுக்கு சொந்தமான உலகம். இதை ஒரு தற்காலிக பரீட்சைக் கூடமாக இறைவன் படைத்துள்ளான். இதில் நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் பதிவாகின்றன. அவற்றுக்கு இறுதித் தீர்ப்பு நாளன்று விசாரணையும் உண்டு. இவ்வுலகில் நாம் இறைவனுக்குக் கீழ்படிந்து வாழக் கடமைப்பட்டுள்ளோம். இதில் தான்தோன்றித்தனமாக வாழவோ சட்டங்கள் இயற்றவோ இறைவன் மனிதனுக்கு அதிகாரம் வழங்கவில்லை என்பதை நாம் அடிப்படையாக உணரவேண்டும். அவன் விதித்த கட்டளைகளை மீறி வாழ்ந்ததன் விளைவுகளே இன்று நாம் கண்டுவரும் கொடுமைகள். ஒருவேளை நாம் இவ்வுலகில் நம் அத்துமீறல்களுக்கான தண்டனையைப் பெறாவிட்டாலும், மறுமை வாழ்வில் அதைப் பெற்றேயாக வேண்டும்.

நாளை நரக வாசிகளின் ஆடையும் நிலையும் எப்படி இருக்கும் என்பதை சற்று நினைவு கூர்தல் இங்கு நலம்:

- **.... எவர் (இறைவனை) நிராகரிக்கிறார்களோ அவர்களுக்கு நெருப்பிலிருந்து ஆடைகள் தயாரிக்கப்படும் கொதிக்கும் நீர் அவர்கள் தலைகளின் மேல் ஊற்றப்படும். அதைக் கொண்டு அவர்களுடைய வயிறுகளிலுள்ளவையும், தோல்களும் உருக்கப்படும். இன்னும்**

**அவர்களுக்காக இரும்பினாலான தண்டங்களும் உண்டு. (இந்த) துக்கத்தினால் அவர்கள் அ(ந் நரகத்)தை விட்டு வெளியேற விரும்பும் போதெல்லாம், அதனுள்ளே திருப்பப்பட்டு, "எரிக்கும் வேதனையைச் சுவையுங்கள்" (என்று சொல்லப்படும்). (திருக்குர்ஆன் 22:19-22)**

அதேவேளையில் இறைநம்பிக்கை கொண்டு இறைவனுக்காக தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட நன்மக்களின் நிலை நேர்மாறாக இருக்கும்:

● **இறைநம்பிக்கை கொண்டு யார் நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ் சுவனபதிகளிலே புகுத்துவான் அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டேயிருக்கும் அங்கே பொன்னாலான கடகங்களிலிருந்தும், முத்திலிருந்தும் ஆபரணங்கள் அணிவிக்கப்படுவார்கள் அங்கு அவர்களுடைய ஆடைகளும் பட்டாக இருக்கும். (திருக்குர்ஆன் 22:23)**

இவ்வுலக வாழ்வு அமைதிமிக்கதாக அமைய வேண்டுமானால் இறைவன் நமக்கு பரிந்துரைக்கும் வாழ்க்கை நெறிப்படி நாம் வாழ முற்படவேண்டும். அதில் தனிமனித நல்லொழுக்கம், ஆண் பெண் உறவு வரம்புகள், திருமணம் உறவு, கணவன் மனைவி,தாய், தந்தை, குழந்தைகள், உறவினர் போன்றோரின் கடமைகள் மற்றும் உரிமைகள் என அனைத்தும் வரையறுக்கப்பட்டு வழங்கப் பட்டுள்ளன. இதுவே இஸ்லாம் என்று அரபு மொழியில் அறியப்படுகிறது. இறைவன் வழங்கும் இந்த நெறிமுறைகளை மீறினால் இவ்வுலக வாழ்வில் குழப்பங்களும் கலகங்களும் நிறையும் என்பது மட்டுமல்ல... இவற்றை மீறுவோருக்கு அவர்கள் இவ்வுலகில் விளைவித்த குழப்பங்களுக்கு தண்டனையாக நரக வேதனையும் கிடைக்கும்.

# வாசகர் எண்ணம்

● அன்பும் பண்பும் உள்ள அருமை சகோதரர்களுக்கு,

சிறந்த அறிவுக் களஞ்சியமாகிய திருக்குர்ஆன் நற்செய்தி மலர் தின்னத் தின்ன தீன் சுவைக் கனி.

**- எட்வின் நெல்சன் ஃபுர்டாடா, பெங்களூர்.**

● உங்கள் ஜூலை இதழ் எதேச்சையாக எனக்குக் கிடைத்தது. பார்த்தேன். ஒரு வரி விடாமல் படித்தேன். மிகவும் சிறப்பாக இருந்தது. ஒவ்வொரு திருக்குர்ஆன் வசனங்களும் படிக்கப் படிக்க என்னுள் மாற்றம் உண்டாகிறது. கைநடுக்கத்தால் தொடர முடியவில்லை. இனிமேல் ஏன் முகவரிக்கும் தொடர்ந்து அனுப்புவீர்கள் என நம்புகிறேன்.


**- வி.எம். ரகுநாதன், ஆரணி, திருவண்ணாமலை**

● இதழ் மிகவும் சிறப்பாக உள்ளது. வாசித்து முடித்ததும் அடுத்த இதழ் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பை உண்டாக்குகிறது. ஆனால் இரண்டு மாதமாக இதழ் வராமல் போனதில் வருந்து கிறேன்.

**- ஏ. பாபு, குன்னூர்,**

# சீரழிக்கும் திரைக் கலாச்சாரம்!

நமது சமூக மனநிலை எந்த அளவு சீர்கெட்டுக் கிடக்கிறது என்பதை ஒரு சிறு உதாரணம் மூலம் விளங்கிக் கொள்ளலாம். நமது கண் முன்னே ஒரு பெண் ஒரு வாலிபனுடன் சுற்றுகிறாள், கொஞ்சுகிறாள், பாலியல் சேட்டைகள் புரிகிறாள், அந்த வாலிபனுடன் நள்ளிரவில் வீட்டுக்கு திரும்புகிறாள் என்று வைத்துக் கொள்வோம். அதே பெண் அடுத்த வாரம் மற்றொருவனுடன் அதே காரியங்களை செய்கிறாள். அதற்கடுத்த வாரம் வேறு ஒருவனுடன்... இவளை சமூகம் என்னவென்று அழைக்கும்? விபச்சாரி என்றுதானே.



ஆனால் இதே காரியத்தை ஒரு பெண் திரையில் செய்தால் அப்பெண்ணிற்குப் பெயர் நடிகை. அது ஆணாக இருந்தால் அவன் நடிகன். அவர்கள் செய்வது கலைசேவை! ஒரே காரியத்தை நிஜத்தில் செய்யும்போது பழிக்கும் சமுதாயம் அந்த நிஜத்தையே காமெராவில் பிடித்து திரைப்படமாகக் காட்டினால் அதற்கு கைதட்டுகிறது. ஆனந்தத்தோடு இரசிக்கிறது. இந்த இரசிகர்கள் போடும் எச்சங்களை உண்டு பிழைக்கும் அந்தக் ”கலை சேவகர்கள்” நாளடைவில் இந்த மக்களின் அன்புக்குரியவர்களாக... இஷ்ட தெய்வங்களாக.... மாறி விடுகிறார்கள்.

ஆம், சின்னத்திரையும் பெரும் திரையும் மக்களை எப்படி மாற்றிவிடுகிறது பாருங்கள்! தற்போது இன்னும் கூடுதலாக மொபைல் ஃபோன் திரைகள்!



## இரட்டை நிலை

எந்த விபச்சாரத்தை தனது சகோதரியோ, மகளோ, மனைவியோ செய்யும்போது இவர்களுக்கு தலைவெடித்து விடுமோ அதே சமூகம் இவர்களைத் தலையில் ஏற்றி வைத்துக் கொண்டு போற்றிப் புகழ்கிறது. எந்த அளவுக்கென்றால் இவர்களுக்கென சிலைகள் வடிக்கப் படுகின்றன, கோவில்கள் கட்டப் படுகின்றன, வழிபாடுகள் நடத்தப்படுகின்றன,

இன்னும் ஒருபடி மேலே போய் நாட்டின் ஆட்சிப் பொறுப்பும் இவர்கள் காலடியில் சமர்ப்பிக்கப்படுகின்றது!

இறுதி இறைத்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு இங்கு நினைவுகூரத் தக்கது:

● ‘நம்பகத்தன்மை பாழ்படுத்தப்பட்டால் மறுமை நாளை எதிர்பார்’ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஒருவர் ‘நம்பகத்தன்மை பாழ்படுவது என்றால் என்ன, இறைத்தூதர் அவர்களே?’ என்று கேட்டார் ‘(ஆட்சியும் அதிகாரமும் என) பொறுப்பு, தகுதியற்றவனிடம்



ஒப்படைக்கப்படும் போது மறுமை நாளை எதிர்பார்த்துக்கொள்' என்று நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி), நூல் - புஹாரி

சற்றும் பொறுப்புணர்வே இல்லாத சுரணையற்ற இந்த சமூகப் போக்கு ஆந்திரா மற்றும் கர்நாடகத்தில் ஓரளவுக்குக் காணப்பட்டாலும் மிகமிகத் தீவிரமாக காணப்படுவது நம் தமிழகத்தில்தான் என்பதற்கு சான்றிதழ் சமர்ப்பிக்கத் தேவையில்லை. இதை அறியாமையின் சிகரம் என்பதா? சமூகச் சீரழிவின் உச்சகட்டம் என்பதா?

## அரசு உயர் விருதுகள்!



திரை மூலம் ஆபாசத்தையும் காமவெறியையும் கொலைவெறியையும் விதைத்து சிறு குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை அனைவரையும் வழிகெடுக்கும் இந்த திரைக் கூத்தாடிகளுக்கு பெரிய செயற்கரிய சாதனை செய்தது போன்று, மத்திய மாநில அரசுகளின் பாராட்டுக்கள்- விழாக்கள் -கேடயங்கள்- விருதுகள் பல தரப்படுகின்றன. இவை அனைத்தும் நாட்டுக்காக உழைக்கும் மக்களின் வரிப்பணங்களில் இருந்து வழங்கப் படுபவை. இது போக, வீர தீரர்களாக சாகச சூரர்களாக தியாகிகளாக பத்தினிப் பெண்களாக கற்புக்கரசிகளாக "நடிக்கும்" இந்தக் கூத்தாடிகள் குவிக்கும் செல்வங்களுக்கு கணக்கும் இல்லை வழக்கும் இல்லை. இவர்களால் ஏமாற்றப்படும் சமூகம் இவர்களுக்குக் கொடுக்கும் அந்தஸ்த்தோ அளவிடமுடியாதது. இந்த அநியாயத்திற்குத் தாரைவார்க்கும் சுயநலச் செய்தி ஊடகங்கள் ஒருபுறம். இவர்களின் அந்தரங்க அசிங்கங்களை கிசுகிசுக்களாகப் பிரசுரித்து கொள்ளையடிக்கும் பிணந்தின்னி வல்லூறுகள் போன்றவர்கள் அவர்கள்!.



## தரக்கட்டுப்பாட்டு சான்றிதழ் வழங்குவோர்!

இந்தத் திரைக்கூத்தாடிகள்தான் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சாதனங்களுக்குத் தரக்கட்டுப்பாட்டு நிபுணர்கள்! விளம்பரங்களில் இவர்கள் தலைகாட்டி சான்றிதழ் கொடுத்தால்தான் அவை விற்பனை ஆகுமாம்! இந்த இழிபிறவிகளின் நடை உடை பாவனைகள்தான் வளரும் சமூகத்தின் முன்மாதிரிகளாம்! .இவர்கள் ஆதரவு கொடுத்தால்தான் நாட்டை ஆளும் மக்களின் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்

படுவார்களாம்! இவர்கள்தான் மாறிமாறி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து ஒருபுறம் இலவசங்களைக் காட்டி மறுபுறம் நாட்டுவளங்களை தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வார்களாம்! என்ன ஒரு அவமானம்!

தமிழனின் தலைவிதி ஏன் இவ்வாறு விபரீதமாகப் போகிறது?

ஒரு காலத்தில் 'கூத்தாடிகள்' என்ற இழிசொல் கொண்டே இவர்களை அழைத்து ஒதுக்கி வைத்திருந்தார்கள் நம் முன்னோர்கள். அவர்கள் அவ்வப்போது ஆன்மீக வளமூட்டி வளர்த்த பண்பாடு எங்கே தொலைந்து போனது?

## பொறுப்புணர்வோடு நடப்போம்

யார் இதைப் பற்றி கவலைப் பட்டாலும் சரி, படாவிட்டாலும் சரி, நமது கண்களின் முன்னால் இந்தத் தீமை கட்டுத்தீ போல பரவுகிறது என்ற காரணத்தால் இறைவிசுவாசிகளாகிய நாம் இதற்கு எதிராக போராட வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இறைவனின் இறுதித் தூதர் நமக்கு இடும் கட்டளை இதுவே:

- உங்களில் எவரேனும் தீமையைக் கண்டால் கையால் தடுக்க வேண்டும். இயலாவிட்டால் நாவால் தடுக்க வேண்டும். அதற்கும் இயலாவிட்டால் மனதால் வெறுக்க வேண்டும். இதுதான் இறைநம்பிக்கையின் இறுதிநிலையாகும். (நூல்: முஸ்லிம்)

மனித மனங்களை ஊடுருவி சமூகத்தை சீர்கெடுக்கும் இந்தத் தீமையை நம்மால் முடிந்த எல்லா வழிகளிலும் தடுக்க நாம் முயலவேண்டும். இறையச்சத்தை - அதாவது நாம் இறைவனால் கண்காணிக்கப்படுகிறோம். அவனிடமே நமது மீளுதலும் பாவபுண்ணியங்களுக்கான விசாரணையும் சொர்க்கமும் நரகமும் உள்ளது என்ற பொறுப்புணர்வை- மக்களுக்கு முதற்கண் ஊட்டவேண்டும். தொடர்ந்து நமது கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் இத்தீமை ஊடுருவாமல் இருக்க ஆகவேண்டிய காரியங்களை செய்யவேண்டும். நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட இடங்களில் குறைந்தபட்சம் நாவினாலாவது தடுக்க வேண்டும். அதாவது இத்தீமைக்கு எதிராக குரல்கொடுக்க வேண்டும்.

## இத்தீமையை விதைப்போருக்கும் துணைபோவோருக்கும் எச்சரிக்கை

அந்த அடிப்படையில் இத்தீமைகளை விதைப்போரும் அதற்குத் துணைபோவோரும் தங்களைத் திருத்திக் கொள்ளாமலே மரணிப்பார்களானால் இவர்கள் மறுமையில் சந்திக்க இருக்கும் தண்டனைகள் பற்றி எச்சரிப்பது நமது கடமை. எந்த தண்டனைகளை பயந்து இன்று நாம் இந்தத் தீமைகளில் இருந்து விலகி நிற்கிறோமோ அவற்றைப் பற்றிய செய்திகளை மனிதாபிமான உணர்வோடு இன்றே இவர்களோடு பகிர்ந்து கொள்வோம்:

ஆம், சம்பந்தப்பட்டவர்களே நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்!

இன்று நாம் வாழும் உலகின் அதிபதி நம்மைப் படைத்த இறைவன் ஆவான். அவனது அருட்கொடைகளை அனுபவித்துவரும் நாம் அவனுக்குக் கீழ்படிந்தே வாழவேண்டும். அதாவது அவன் எவற்றைச் செய் என்று சொல்கிறானோ அவற்றை செய்தாக வேண்டும் அவையே புண்ணியங்கள் என்று அறியப்படுகின்றன. எவற்றை செய்யாதே என்று

தடுத்துள்ளானோ அவற்றைக் கண்டிப்பாக செய்யக்கூடாது. அவையே பாவங்கள் எனப்படுகின்றன. இந்தத் தற்காலிகமான உலகை ஒருநாள் இறைவன் முழுமையாக அழிப்பான். அதன்பிறகு மீண்டும் ஒருவர் விடாமல் அனைவரையும் எழுப்பி விசாரணை செய்து அதன்பின் பாவிகளுக்கு தண்டனையாக நரகத்தையும் புண்ணியவான்களுக்குப் பரிசாக சொர்க்கத்தையும் வழங்கவுள்ளான். அதுதான் நம்முடைய நிரந்தர இருப்பிடம். (மேலதிக விளக்கங்களுக்கு அவனது இறுதிவேதமான திருக்குர்ஆனைப் படிக்கவும்).

சரி, இப்போது நீங்கள் செய்தும் பரப்பியும் வருகின்ற பலதும் குற்றங்களாக இருந்தாலும் விபச்சாரம் என்ற குற்றத்தைப் பற்றி மட்டும் இங்கு உதாரணமாக எடுத்துகொண்டு எச்சரிப்போம். இவ்வுலகுக்கு அதிபதியாகிய இறைவன் மனிதகுல நன்மை கருதி கீழ்கண்ட கட்டுப்பாடுகளை விதித்துள்ளான்:

அவன் விதித்த சட்டப்படி ஒரு அந்நிய ஆணும் அந்நிய பெண்ணும் தனிமையில் சந்திப்பதோ பேசுவதோ அல்லது உறவாடுவதோ தடை செய்யப்பட்ட ஒன்றாகும். தாம்பத்தியம் அல்லது உடலுறவு என்பதை திருமணமான ஆணுக்கும் பெண்ணுக்கும் அதாவது கணவனுக்கும் மனைவிக்கும் அதுவும் எவர் கண்ணிலும் படாமல் ரகசியமாக செய்வதற்கு மட்டுமே அவன் அனுமதித்துள்ளான். அதை....

- ஒரு அந்நிய ஆணும் அன்னியப் பெண்ணும் செய்வது தண்டனைக்குரிய பாவம்.
- அதைப் பிறர் பார்க்கச் செய்வது அதைவிடப் பாவம்.
- அதைப் பதிவு செய்வது அதைவிடப் பாவம்.
- அந்தப் பதிவை பொதுமக்களின் பார்வைக்கு வைப்பதும்
- அதைக்கொண்டு சம்பாதிப்பதும் வயிறு வளர்ப்பதும்
- அவற்றை வருணிப்பதும் விமர்சிப்பதும்
- அவற்றைக் காண்பதும் ரசிப்பதும் என அனைத்துமே பாவமாகும்.

இவற்றை இங்கு செய்துவிட்டு அதன் பாதிப்புகளைத் துடைத்து எறிந்துவிட்டு ஒன்றுமே நடவாத மாதிரி நீங்கள் நடந்து கொள்ளலாம். ஆனால் அவை அனைத்துமே இறைவனால் ஆங்காங்கே பதிவு செய்யப்படுகின்றன. உங்கள் மூளையிலும் அதன் பதிவைக் காணலாம்! உங்கள் கண்களே cctv கேமராக்கள் போல செயல்படுகின்றன என்பதை மறவாதீர்கள்.

இந்தப் பதிவுகள் அனைத்தும் இறுதித் தீர்ப்புநாள் அன்று உங்களுக்கு எதிரான சாட்சிகளாக நிற்கும்.

**36:65. அந்த நாளில் நாம் அவர்களின் வாய்களின் மீது முத்திரையிட்டு விடுவோம் அன்றியும் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தது பற்றி அவர்களுடைய கைகள் நம்மிடம் பேசம் அவர்களுடைய கால்களும் சாட்சி சொல்லும்.**

**99:7,8.. எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அனுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான்.**

விசாரணைக்குப் பிறகு பாவிகளுக்கு நரகமும் புண்ணியவான்களுக்கு

*சொர்க்கமும் விதிக்கப்படும். அதுதான் மனிதனின் நிரந்தரமான அழியாத இருப்பிடம் ஆகும்.*

*அந்த நரகம் எப்படிப்பட்டது என்பதை விளங்க திருக்குஆனைப் படியுங்கள். பல்வேறு இடங்களில் அதுபற்றி திருக்குர்ஆனில் இறைவன் குறிப்பிடுகிறான் உதாரணத்திற்கு கீழ்கண்ட வசனகளைப் படியுங்கள்.*

- **78:21-30. நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது, வரம்பு மீறிவர்களுக்குத் தங்குமிடமாக. அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள். கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர. (அதுதான் அவர்களுக்குத்) தக்க கூலியாகும்.**
- **18:29 .....அநியாயக் காரர்களுக்கு (நரக) நெருப்பை நிச்சயமாக நாம் சித்தப்படுத்தியுள்ளோம்கி (அந்நெருப்பின்) சுவர் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும்கி அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரைக் கொண்டே இரட்சிக்கப்படுவார்கள். (அவர்களுடைய) முகங்களை அது சுட்டுக் கருக்கி விடும். மிகக் கேடான பானமாகும் அது! இன்னும், இறங்கும் தலத்தில் அதுவே மிகக் கெட்டதாகும்.**

*எந்த முகத்தைக் கொண்டு சுவரொட்டிகளில் சிரித்துக்கொண்டு நின்றீர்களோ அதன் கதி நாளை இதுதான்! இது நூறு சதவீத உண்மை!*

## அரசின் கடமை

*விபச்சாரம் என்பது சமூகத்தில் பெருங்குழப்பங்களுக்கு காரணமாக அமைவது. தலைமுறைகளை பாதிப்பதோடு குடும்ப அமைப்புகள் சீர்குலைவு, பாலியல் கொடுமைகள், தந்தைகளில்லா குழந்தைகள் உருவாகுதல், சிசுக்கொலைகள் போன்ற பல பாவங்களும் சமூகத்தில் மலிய காரணமாக அமைகிறது. அதை தடுக்கவேண்டியது சமூகப் பொறுப்புணர்வு கொண்ட ஒவ்வொரு அரசின்மீதும் கடமையாகும். அந்த வகையில் அரசுக்கு இறைவனிடும் கட்டளை இது:*

- **விபச்சாரியும், விபச்சாரனும் – இவ்விருவரில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள், மெய்யாகவே, நீங்கள் அல்லாஹ்வின் மீதும், இறுதிநாள் மீதும் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால், அல்லாஹ்வின் சட்டத்(தை நிறைவேற்றுவ)தில், அவ்விருவர் மீதும் உங்களுக்கு இரக்கம் ஏற்பட வேண்டாம், இன்னும் அவ்விருவரின் வேதனையையும் இறைவிசுவாசிகளில் ஒரு கூட்டத்தார் (நேரில்) பார்க்கட்டும்' (அல்குர்ஆன் 24:2)**

## மன்னிக்கக் காத்திருக்கும் இறைவன்

*மனித குல நன்மைக்காக பல கட்டுப்பாடுகளை விதித்துள்ள இறைவன் அவற்றை மீறுவோருக்கு தண்டனைகளையும் பரிந்துரைக்கிறான். அதேவேளையில் பாவம் செய்தா பின்னர் திருந்திவாழ முற்படுவோருக்கு பாவமன்னிப்பின் வாசலையும் திறந்தே வைத்துள்ளான். திருந்தி மீள்வோரை நேசித்து அரவணைக்கவும் செய்கிறான்:*

- **39:53. தமக்கு எதிராக வரம்பு மீறிய எனது அடியார்களே! இறைவனின் அருளில் நம்பிக்கையிழந்து விடாதீர்கள்! பாவங்கள் அனைத்தையும் இறைவன் மன்னிப்பான். அவன் மன்னிப்பவன் நிகரற்ற அன்புடையோன் என்று (இறைவன் கூறுவதைத்) தெரிவிப்பீராக!**

*சிந்தியுங்கள்! இன்றே திருந்தி உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்பு கோருங்கள்! பரிகாரம் தேடுங்கள்!*

# வணக்கசாலி பார்சிசா வீழ்ந்த கதை!

இந்த தற்காலிக வாழ்க்கையை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்கான பரீட்சைக்கூடமாகவும் படைத்துள்ள இறைவன் இங்கு அந்த பரீட்சையின் பாகமாக ஷைத்தான் என்ற ஒரு படைப்பினத்திற்கும் அனுமதி கொடுத்துள்ளான். இவ்வுலகில் நேர்வழி காட்டுவதற்காக இறைவனின் தூதர்களையும் வேதங்களையும் அனுப்பிய இறைவன் மனித உள்ளங்களில் ஊசலாட்டங்கள் உண்டாக்கி அவனை வழிகெடுக்க ஷைத்தானுக்கும் ஆற்றலை வழங்கியுள்ளான்.

எனவே யாரெல்லாம் ஷைத்தானின் ஊசலாட்டங்களுக்கு ஆளாகாமல் இறைவழிகாட்டுதல்படி அவனது எவல்-விலக்கல்களைப் பேணி வாழ்கிறார்களோ அவர்கள் இந்தப் பரீட்சையில் வெற்றி பெறுகிறார்கள். அதேவேளையில் யார் ஷைத்தானின் ஊசலாட்டங்களுக்கு அடிபணிந்து இறைவழிகாட்டுதல்களைப் புறக்கணித்து வாழ்கிறார்களோ அவர்கள் இப்பரீட்சையில் தோல்வியுறுகிறார்கள். இறுதியில் வெற்றி பெற்றவர்கள் சொர்க்கத்தையும் தோல்வி அடைந்தவர்கள் நரகத்தையும் அடைகிறார்கள்.

மனிதனது தோற்றம் முதல், ஷைத்தானுடனான அவனது கதை ஆரம்பித்து விட்டது. அதுதான் முதல் மனிதர் - நமது ஆதித் தந்தை ஆதம் (அலை) அவர்களுக்கு எதிரான விரட்டப் பட்ட ஷைத்தானின் சூழ்ச்சி, அதன் பின் அவரின் வழித்தோன்றல்களை மறுமை நாள் வரை வழி கெடுக்க முயற்சித்துக் கொண்டே இருப்பான்.

இதனால்தான் இறைவன் ஷைத்தானுடைய தந்திரத்தில் இருந்தும் தொந்தரவில் இருந்தும் பாதுகாத்துக் கொள்ளும் படி திருக்குர்ஆனில் பல இடங்களில் நம்மை எச்சரித்துள்ளான்.

- **நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்குப் பகைவனாக இருக்கின்றான், ஆகவே நீங்களும் அவனைப் பகைவனாகவே எடுத்துக் கொள்ளுங்கள், அவன் (தன்னைப் பின்பற்றும்) தன் கூட்டத்தாரை அழைப்பதெல்லாம் அவர்கள் கொழுந்து விட்டெரியும் (நரக) நெருப்புக்கு உரியவர்களாய் இருப்பதற்காகவே தான். (திருக்குர்ஆன் 35:6)**
- **(தான தர்மங்கள் செய்வதினால்) வறுமை (உண்டாகிவிடும் என்று அதைக்) கொண்டு உங்களை ஷைத்தான் பயமுறுத்துகிறான் ஒழுக்கமில்லாச் செயல்களைச் செய்யுமாறும் உங்களை ஏவுகிறான் ஆனால் அல்லாஹ்வோ, (நீங்கள் தான தருமங்கள் செய்தால்) தன்னிடமிருந்து மன்னிப்பும், (அருளும், பொருளும்) மிக்க செல்வமும் (கிடைக்கும் என்று) வாக்களிக்கின்றான். நிச்சயமாக அல்லாஹ் விசாலமான (கொடையுடைய)வன் யாவற்றையும் நன்கறிபவன். (திருக்குர்ஆன் 2:268)**


*(அல்லாஹ் என்றால் வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன் என்று பொருள்)*

- **நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இறைமார்க்கம் இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்துவிடுங்கள், தவிர ஷைத்தானுடைய அடிச்சுவடுகளை நீங்கள் பின்பற்றாதீர்கள், நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் ஆவான், (திருக்குர்ஆன் 2:208)**

வணக்கசாலியான மனிதனையும் அந்த ஷைத்தான் வழிதவறச் செய்ய முடியும் என்பதற்கு பார்சிசா ஒரு சிறந்த உதாரணம்.

**வணக்கசாலி பார்சிசா**

இஸ்ரவேலர் காலத்தில் பார்சிசா என்னும் ஒரு வணக்கசாலி இருந்தார். தான் வாசிக்கும் ஊரிலேயே இவர்தான் கடவுளை அதிகம் வணங்குபவராக எல்லோராலும் அறியப்பட்டவர், ஆகையால் இவர் மீது அவ்வூர் மக்கள் அனைவருக்கும் எப்பொழுதும் ஒரு தனி மதிப்பும், மரியாதையும் உண்டு.



இதே ஊரில் வசிக்கும் சகோதரர்கள் இருவருக்கு, ஒரு நீண்ட நெடிய பிரயாணம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் அவர்களுக்கு தங்கை ஒருத்தி இருந்தாள். அவளை தனியே விட்டுச்செல்ல மனமில்லாமல், அவளைப் பாதுகாக்க ஒரு நம்பிக்கையான நல்ல மனிதரிடம் ஒப்படைத்துவிட்டு செல்ல நினைத்தார்கள். ஊர் மக்கள் சிலரிடம் ஒருவரை பரிந்துரைக்குமாறு வேண்டினர். அவர்கள் விசாரித்த ஊர்மக்கள் அனைவரும் இந்த பார்சிசாவையே பரிந்துரைத்தனர்.

இந்த சகோதர்களும் தங்களுடைய சகோதரியை அழைத்துக்கொண்டு பார்சிசாவிடம் சென்று தாங்கள் பிரயாணம் முடித்துவிட்டு வரும் வரை தங்களின் தங்கைக்கு அடைக்கலம் தரும் படி வேண்டினர். ஆனால் பார்சிசாவோ 'விரட்டப்பட்ட ஷைத்தானில் இருந்து நான் இறைவனிடம் பாதுகாவல் தேடுகிறேன்' என்று கூறி அடைக்கலம் தர மறுத்துவிட்டார். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தனிமையில் இருக்கும்போது அவர்களுடன் மூன்றாவதாக ஷைத்தான் அவர்களிடையே குழப்பத்தை உண்டு பண்ணுவான் என்று பார்சிசா பயந்ததே அதற்குக் காரணம்.

ஆகவே அந்த சகோதர்கள் இருவரும் திக்கற்றவர்களாக தங்களுடைய தங்கையை அழைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர். இப்பொழுது, இளகிய மனம் கொண்ட பார்சிசாவின் மனதிற்குள் ஷைத்தான் ஊசலாட்டத்தை உண்டாக்கினான். "நீதான் இந்த ஊரிலேயே மிக பெரிய வணக்கசாலி, நீயே இந்த பெண்ணுக்கு அடைக்கலம் கொடுக்கவில்லை என்றால், இந்த சகோதரர்கள் அந்த பெண்ணை வேறொருவரிடம் ஒப்படைத்து, அந்த மனிதனால் இந்த பெண் சீரழிக்க பட்டால்? பாவம் அந்த பெண்!... நீயே ஏன் அந்த பெண்ணை பாதுகாக்கக் கூடாது?".

தனக்குள் தோன்றிய எண்ணம் சரியானதே என்று நினைத்த பார்சிசா, அந்த சகோதர்களை மீண்டும் அழைத்து "உங்கள் சகோதரியின் பாதுகாப்பிற்கு நான் பொறுப்பேற்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை... நான் வசிக்கும் இந்த ஆலயத்தில் உங்கள் தங்கை தங்ககூடாது, இந்த ஆலயத்திற்கு எதிரில் உள்ள அறையில்தான் தங்க வேண்டும், மேலும் உங்கள் தங்கைக்கான உணவை நான் இந்த ஆலயத்தின் வாயிலில் வைத்து விடுவேன் உங்கள் தங்கையே வந்து தனது உணவை எடுத்துக்கொண்டு செல்லவேண்டும்". இந்த நிபந்தனைக்கு ஒப்புக்கொண்ட சகோதரர்களும் தங்களின் தங்கையை பார்சிசாவிடம் ஒப்படைத்துவிட்டு, முழு மனத்திருப்தியுடன் தங்கள் பயணத்தைத் தொடங்கினர்.

நாட்கள் நகர்ந்தன, பார்சிசாவும்தான் சொன்னபடியே அந்த பெண்ணை

பராமரித்து வந்தார். இப்பொழுது பார்சிசாவின் மனதிற்குள் ஷைத்தான் ஊசலாட்டத்தை உண்டாக்கினான், “நீ அந்த பெண்ணிற்கான உணவை உன்னுடையது ஆலயத்தின் வாயிலில் வைக்கிறாய், ஒவ்வொருமுறையும் அந்த பெண் உன் ஆலயத்தின் வாயிலை நோக்கி வருவதால், மற்றவர்களின் பார்வையில் அவள் விழுகிறாள், இதனால் அந்த பெண்ணிற்கு ஏதேனும் ஆபத்து நேரிடலாமே? ஆகவே நீயே ஏன் அந்த உணவை கொண்டுபோய் அவள் அறையின் வாயிலில் வைக்ககூடாது? அவ்வாறு செய்தால் அந்த வீட்டில் அந்த பெண் வசிப்பதை யாரும் அறியமாட்டர்களே! இது அந்த பெண்ணிற்கு மிகவும் பாதுகாப்பாகுமல்லவா?” தனக்குள் தோன்றிய இந்த எண்ணமும் சரியானதே என்று நினைத்த பார்சிசாவோ அவ்வாறே செய்தார்.



நாட்கள் கழிந்தன, இப்பொழுது பார்சிசாவின் மனதிற்குள் மீண்டும் ஷைத்தான் ஊசலாட்டம் உண்டாக்கினான். “அந்த பெண்ணின் வீட்டு வாயில் வரை செல்லும் நீ, ஏன் அந்த பெணின் வீட்டிற்க்கு உள்ளே சென்று உணவை கொடுக்கக்கூடாது? இது அந்த பெண்ணிற்கு இன்னும் பாதுகாப்பாயிற்றே!” தனக்குள் தோன்றிய இந்த எண்ணமும் சரியானதே என்று நினைத்த பார்சிசாவோ அவ்வாறே உள்ளே சென்று உணவை வழங்க துணிந்தார்.

இவ்வாறே சில நாட்கள் நகர, இப்பொழுது பார்சிசாவுக்குள் மீண்டும் ஷைத்தான் ஊசலாட்டம் உண்டாக்கினான், “வீட்டின் உள்ளே வரை செல்கிறாய், அந்த பெண்ணிடம் இன்று இரண்டு வார்த்தைகள் பேசினால்தான் என்ன? பாவம் அந்த பெண், யாரிடம் பேசுகிறாள்? அதில் ஒன்றும் தவறில்லையே?” தன் மனதிற்குள் தோன்றிய இந்த எண்ணமும் சரியானதே என்று நினைத்த பார்சிசா, அந்த பெண்ணிடம் பேசத்துவங்கினார்... நாளடைவில் அது காதலாக மாற, காதல் காமமாக மாறி பிள்ளை பேறுவரை சென்றுவிடுகிறது.

எல்லாம் நடந்தபின் தன்னுடைய நிலையை எண்ணிப் பதற்றமடைந்தார் பார்சிசா! ‘இந்த குழந்தை உயிரோடு இருந்தால் நிச்சயம் ஒரு நாள் உன்னுடைய குட்டு வெளிப்பட்டுவிடும்’ என்று அச்சுறுத்தினான் ஷைத்தான்.. அப்புறம் என்ன? அந்த குழந்தையை கொன்று அந்த அறையிலேயே புதைத்தும் விடுகிறார் பார்சிசா! மீண்டும் ஷைத்தான் அச்சத்தைப் போட்டான். ‘குழந்தையை இழந்த அந்த பெண். என்றேனும் ஒரு நாள் தனக்கு நிகழ்ந்ததை வெளிஉலகிற்கு அம்பலபடுத்திவிடுவாள். அப்போது என்ன செய்வாய்?’ ..தொடர்ந்து அந்தப் பெண்ணையும் கொலைசெய்து விட்டார் பார்சிசா. அவளையும் அந்த அறைக்குள்ளே புதைத்தார். அந்த வீட்டிற்க்கு வெளியில் ஒரு போலியான சமாதி ஒன்றைக் கட்டினார். ஊர் மக்களிடம் அந்த பெண் நோய் வாய்ப்பட்டு மரணம் எய்தி விட்டாள் என்று கூறினார். .

**ஊர் திரும்பிய சகோதரர்கள்**

தங்களுடைய பயணத்தை முடித்துக்கொண்டு ஊர் திரும்பிய சகோதரர்கள், தங்களுடைய தங்கையை காண பார்சிசாவிடம் வந்தனர். வந்தவர்களிடம் ஊர்மக்களிடம் கூறியதைப் போலவே அந்த பெண் நோய் வாய்ப்பட்டு இறந்துவிட்டதாக கூறினார் பார்சிசா. தான் கட்டிய போலி சமாதியையும் அவர்களுக்குக் காட்டினார். பார்சிசாவின் மீது அந்த சகோதரர்கள் வைத்திருந்த நம்பிக்கை அவர் மீது எள்ளளவும் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை. தங்களுடைய தங்கைக்காக பிரார்த்தனை செய்துவிட்டு சோகமுகத்துடன் வீடு திரும்பினர்.

வீடு திரும்பிய சகோதரர்களின் கனவில் வந்து ஷைத்தான் நடந்ததை அறிவித்தான். ஒருவருக்கு அன்றைய இரவே, தன் தங்கை பார்சிசாவால் நாசம் செய்யப்பட்டு ஒரு குழந்தையுடன் கொல்லப்பட்டு அவள் தங்கியுருந்த அந்த அறையிலேயே புதைத்திருப்பது போன்று கனவு வருகிறது. அவனது சகோதரனுக்கும் அதே போன்ற கனவு வர தாம் கண்ட கனவு உண்மையாக இருக்குமோ என்ற சந்தேகம் வலுக்கிறது. சகோதரர்கள் இருவரும் பார்சிசா காட்டிய சமாதியை தோண்டி பார்த்தனர் அங்கு சகோதரியின் உடல் கிடைக்கவில்லை, பிறகு அவள் தங்கியிருந்த அந்த அறையினுள் தோண்டி பார்த்தனர் அங்கு தங்களுடைய தங்கை உடலையும், ஒரு குழந்தையின் சடலத்தையும் கண்டெடுத்தனர், சகோதரர்கள் இருவரும் அந்நாட்டு மன்னரிடம் சென்று முறையிட்டனர்.



தன்னுடைய குட்டு வெளிப்பட்டு விட்டது, மன்னரின் கையில் சிக்குண்டால் மரண தண்டனைதான் என்று பயந்து போன பார்சிசாவின் முன் தோன்றி ஷைத்தான் கூறினான், “பார்சிசாவே! ஆரம்பத்தில் இருந்து நான்தான் உன் மனதில் ஊசலாட்டத்தை உண்டாக்கினேன். இப்பொழுது நீ வசமாக மாட்டிக் கொண்டாய். இப்போது நான் சொல்வது போல செய்தால் உன்னைக் காப்பாற்றுகிறேன்”

“இதிலிருந்து தப்பிக்க நீ எனக்கு சிரம் பணி! நான் உன்னை காப்பாற்றுகிறேன்“ என்றான். விரக்தியில் பார்சிசாவும் அவ்வாறே ஷைத்தானுக்கு சிரம் பணிந்தார்! உடனே ஷைத்தான் அலறினான், “இல்லை! இல்லை! நிச்சியமாக நீ வணங்கி சிரம் பணிய மிகத்தகுதியானவன் இறைவன் மட்டுமே, நான் உன்னில் இருந்து விலகிவிட்டேன்” என்று கூறி விரண்டோடினான்!. பார்சிசாவோ மன்னரால் கல்லால் எறிந்து கொல்லும் தன்டனைக்கு ஆளாக்கப்பட்டார்.

● **(இன்னும் இவர்கள் நிலை) ஷைத்தானுடைய உதாரணத்தைப் போன்றிருக்கிறது, (அவன்) மனிதனை நோக்கி: “நீ (இறைவனை) நிராகரித்து விடு” என்று கூறுகிறான். அவ்வாறு மனிதன் நிராகரித்ததும் “நான் உன்னை விட்டும் ஒதுங்கிக் கொண்டேன். (ஏனெனில்) நான் அகிலங்களுக் கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்வை அஞ்சுகிறேன்” என்றான். (திருக்குர்ஆன் 59:16)**

# சத்தியத்தை நோக்கிய என் பயணம்



ஒருநாள் ஓய்வு நேரம். என்னிடம் இருந்த அனைத்து புத்தகங்களையும் படித்தாகி விட்டது, புதிதாக படிப்பதற்கு ஒன்றுமில்லை. அப்போது, மேசையில் இருந்த குரான் கண்ணில் பட்டது.

வீட்டில் போரடிக்கும் போது, ஒரு வார இதழை எடுத்து நாலு பக்கங்களை புரட்டி பின்னர் வைத்துவிடுவோமே, அதுபோல நினைத்துதான் குரானைத் திறந்தேன்.

குர்ஆனில் குறை கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணமெல்லாம் இல்லை. என்னைப் பொறுத்தவரை கடவுள் இல்லை, அவ்வளவுதான். இது மற்றுமொரு புத்தகம், அவ்வளவே...

முதல் அத்தியாயத்தை பார்த்தேன், அல் பாத்திஹா என்றிருந்தது. அதில் ஏழு வசனங்கள். நல்ல அழகான, கோர்வையான வசனங்கள். முஸ்லிம்கள் குரானை இறைவேதமென்று சொன்னாலும், என்னைப் பொறுத்தவரை அது மனிதரால் எழுதப்பட்டது. அதனால், இந்த புத்தகத்தை எழுதியவர் நல்ல இலக்கியவாதி என்று பாராட்டினேன். நல்ல புத்திசாலி என்றும் நினைத்தேன், படிப்பவர்களை துவக்கத்திலேயே நன்றாக கட்டிப்போடுகிறாரே...

அதில் ஒரு வசனம்,

- **தீர்ப்பு நாளின் அதிபதி --- (திருக்குர்ஆன் 1:3)**

என்ன தீர்ப்பு நாளா?, இவரே மக்களுக்கு கஷ்டத்தை கொடுப்பாராம், இவரே தீர்ப்பு சொல்லுவாராம் என்று கோபப்பட்டேன்...

முதல் சூரா என்னை மேற்கொண்டு படிக்க தூண்டியது. அடுத்த அத்தியாயம், சூரத்துல் பகரா...

அதன் இரண்டாது வசனம்,

- **இது திரு வேதமாகும் இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. பயபக்தியுடையோருக்கு நேர்வழி காட்டியாகும். --- (திருக்குர்ஆன் 2:2)**

என்ன ஒரு அதிகார தோரணை என்று வியந்தேன். நிச்சயமாக இந்த புத்தகத்தை எழுதியவர் அறிவாளிதான். அதுமட்டுமல்லாமல் ஒரு அறிவுசார்ந்த விவாதத்திற்கு தயார்படுத்தின அந்த வசனங்கள்.

படித்துக்கொண்டே வந்தேன். அந்த அத்தியாயத்தின் முப்பதாவது *(30)* வசனம் ஒரு கனம் என்னை திக்குமுக்காட செய்தது. ஏனென்றால் என் மனதில் நீண்ட நாட்களாக இருந்த கேள்வி அங்கு கேட்கப்பட்டிருந்தது.

ஏன் கடவுள் அநியாயக்கார மனிதனை படைக்க வேண்டும்? என்ற கேள்விதான் அது...

என்னுடைய கேள்வியை இங்கே வானவர்கள் கேட்கின்றனர்.

- **இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி ''நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்'' என்று கூறியபோது, அவர்கள் ''நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி ரத்தம் சிந்துவோரையா**

**அமைக்கப்போகிறாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னை துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கின்றோம்" என்று கூறினார்கள். (திருக்குர்ஆன் 2:30)**

இந்த ஒரு வசனம் என் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நான் நாத்திகனாக மாறியதில் இந்த ஒரு கேள்விக்கு நிச்சயம் முக்கிய பங்குண்டு.

வானவர்கள் கேட்பது நியாயம்தானே?. அவர்களோ தவறு செய்யாதவர்கள், இறைவனுக்கு கட்டுப்பட்டவர்கள், அவர்களையே பூமியில் வாழ வைத்திருக்கலாமே? ஏன் இந்த அநியாயக்கார மனிதனை படைக்க வேண்டும்? வானவர்களின் கேள்வி மிக நியாயமானது...இதற்கு என்ன பதில் என்று ஆர்வமுடன் மேற்கொண்டு படித்தேன்.

அதே வசனத்தின் இறுதியில்,

**அவன் " நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்" எனக் கூறினான் --- (திருக்குர்ஆன் 2:30)**

என்ன நீ அறிவாயா? ஏன் பாவம் செய்யக்கூடிய மனிதர்களை படைத்தாய் என்று கேட்டால், அதற்கு அனைத்தையும் நீ அறிவாய் என்பதுதான் பதிலா?

இப்போது குரானுடன் நான் வாக்குவாதம் செய்ய ஆரம்பித்துவிட்டேன் (சிரிக்கிறார்), இந்த குரானை முழுமையாக படித்து என் மற்ற கேள்விகளுக்கும் என்ன பதிலளிக்கிறது என்று பார்த்து விட வேண்டியதுதான் என்று முடிவெடுத்துக் கொண்டேன்.

நாலு பக்கங்கள் மட்டுமே திருப்பலாம் என்றிருந்தவனை இந்த குரான் மென்மேலும் படிக்க தூண்டிக்கொண்டே இருந்தது, என்னுடைய கேள்விகள் ஒவ்வொன்றாய் பதிலளிக்கப்பட்டு கொண்டே வந்தன.

என் அனுபவங்களை முழுமையாக சொல்ல இந்த நேர்க்காணல் நேரம் போதாது. ஆனால் நான் சொல்ல விரும்புவதெல்லாம், குரானை முழுமையாக படித்த பிறகு, தனிப்பட்டமுறையில் என் கேள்விகளுக்கு விடைகள் கிடைத்தன.

குரானின் வசனங்கள் ஆணித்தரமானவை, ஆழ்ந்த கருத்துக்களை கொண்டவை.

பிறகு, என் இருபத்தி எட்டாவது வயதில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன்.

(டாக்டர் ஜெ∴ப்ரி லேங் (Dr.Jeffrey Lang), அமெரிக்காவின் கன்சாஸ் பல்கலைகழகத்தில் (University of Kansas) கணிதத்துறை பேராசிரியராய் இருப்பவர். 1980 களின் முற்பகுதியில், தன் 28 ஆவது வயதில் இஸ்லாத்தை தழுவியவர். தன் பதினாறு வயதிலிருந்து இஸ்லாத்தை ஏற்கும்வரை நாத்திகராக இருந்தவர்)

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# நீ பிறந்தது எதற்காக?

"உலகம் பிறந்தது எனக்காக
ஓடும் நதிகளும் எனக்காக
மலர்கள் மலர்வது எனக்காக
அன்னை மடியை விரித்தாள் எனக்காக........"

தன்னை மறந்து பாடிக்கொண்டிருந்தான் சசிதரன்.

"ஆமாம் எல்லாம் உனக்காகத்தான்.. ஒப்புக்கொள்கிறேன், ஆனால் நீ பிறந்தது எதற்காக சசி?" என்று கேட்டவாறே ஹாஸ்டல் அறைக்குள் நுழைந்தான் சலீம்.

"ஏதோ பழைய பாடல்...... ரொம்பப் பிடிக்கும்.. பாடிக் கொண்டிருந்தேன்....."

"ஆனால் அர்த்தமுள்ள பாடல். என் கேள்வியும் அர்த்தமுள்ளதுதான், எல்லாமே உனக்காகத்தான் என்றால் நீ பிறந்தது எதற்காக? ஒரு காரணம் இருக்க வேண்டுமல்லவா? அதைத்தான் நான் கேட்கிறேன்...."

"..............."

"ஆம், சசி இன்று நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் பூமியின் அமைப்பையும் அதனைச் சுற்றி உள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரங்களின் கட்டுக்கோப்பான அமைப்பையும் பார். உதாரணமாக, இப்பூமி தனது அச்சில் சுற்றிக் கொண்டு சூரியனில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரத்தில் ஒரு வட்ட வடிவப் பாதையில் வலம் வந்து கொண்டிருக்கிறது என்பதை அறிவாய். இந்த தூரம் சற்று குறைந்தால் என்ன ஆகும் தெரியுமா?"

"ஆமாம் சலீம், நாம் எல்லாம் தாங்க முடியாத வெப்பத்தினால் சுட்டுப் பொசுக்கப்பட்டு விடுவோம்."

" தூரம் சற்று கூடினால் என்ன ஆகும்?"

"தெரிந்த விஷயம்தானே ..... நாம் தாங்க முடியாத குளிரில் உறைந்துபோய் மடிந்துவிடுவோம்!"

" அதேபோல் பூமியின் சுழற்சி வேகம் திடீரென்று கூடினால்....?"

"நிலநடுக்கமும் சுனாமியும்தான்!... அப்படி ஒன்று நடந்தால் பூமியின் மேல் ஒன்றும் இருக்காது, எல்லாம் தரைமட்டமாகி விடும். "

"அதேபோல் இப்பூமியைப் பொதிந்திருக்கும் காற்றுமண்டலத்தின் அழுத்தத்தை எடுத்துக் கொள்...... இதன் அளவு சற்று கூடவோ குறையவோ செய்தால் என்ன ஆகும்?"

"தாங்க முடியாத புயல்காற்றினாலும் அலைக்கழிக்கப்படலாம், மனிதன் சுவாசிக்க காற்று இல்லாமையாலும் அலைக்கழிக்கப்படலாம். நீ சொல்ல வருவது புரிகிறது சலீம், ஆக மொத்தம் இவற்றையெல்லாம் கட்டுப்படுத்தி வைக்காவிட்டால் மனித வாழ்வே இங்கு சாத்தியமில்லைதான்!"

"இவை மட்டுமல்ல சசி , இவற்றைப்போல் எத்தனையோ அளவைகளை சமநிலையில் நிலைநிறுத்தி வைத்திருப்பதைப் பார்த்தால் மனித வாழ்வு என்பது சர்க்கஸில் கயிற்றில் நடப்பது போல் உள்ளது. இந்த சமநிலைகளில் எங்காவது ஒரு பிசகு நேர்ந்தாலும் மனித வாழ்க்கை அதோகதிதான்!"

“உண்மைதான் சலீம்”

“மேலும் உனக்குள்ளே நடக்கும் எண்ணற்ற அதிசயங்களைப் பார். உதாரணமாக நீ உண்ணும் உணவு எவ்வளவு எளிதாக சக்தியாகவும், இரத்தமாகவும், வியர்வையாகவும் மாறுகிறது? உன்னை ஆரோக்கியத்தோடு வாழவைக்க எவ்வளவு வி'யங்கள் சமநிலையில் நிறுத்தப் படுகிறது தெரியுமா உனக்கு?”

“நான் அதைப் பற்றி எல்லாம் யோசித்ததில்லை சலீம்”

“ஆச்சரியம்தான், நீ பிறந்தது முதல் உனக்குள்ளே அன்றாடம் நடக்கக்கூடிய அற்புதங்களைப் பற்றி யோசிக்காமல் இவ்வளவு வருடங்களைக் கடத்தி வந்திருக்கிறாய்.”

“நான் மட்டுமல்ல சலீம், பலரும் அப்படித்தான் என்று நினைக்கிறேன். ஏதாவது நோய் வரும்போதுதான் நம் உடலின் அருமையை உணர்கிறோம்.”

“ஆமாம் சசி, டாக்டரிடம் போனால் அவர் நாடி, இதயத்துடிப்பு, இரத்த அழுத்தம் என பலதையும் பரீட்சிக்கிறார். சர்க்கரை, கொலஸ்ட்ரால் போன்றவற்றை பரிசோதிக்க வைக்கிறார், ஸ்கேனிங், எண்டோஸ்கோபி மூலம் உடலுக்குள்ளே உள்ளவற்றை ஆராய்கிறார். எல்லாம் நார்மல், நார்மல் என்று வரும். ஏதாவது ஒன்று ஒரு குறிப்பிட்ட ரேஞ்சில் இருந்து கூடினாலோ அல்லது குறைந்துவிட்டாலோ அதை வைத்து இன்ன நோய் என்று கண்டுப்பிடிக்கிறார். இங்கு யோசிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் டாக்டர் பரிசோதனைக்கு உட்படுத்திய விஷயங்களும் உட்படுத்தாத எண்ணற்ற விஷயங்களும் சமநிலையில் நிறுத்தப் படுவதால்தான் நீ இன்று உயிரோடு உள்ளாய், என்பதுதான்!”

“உண்மைதான் சலீம், கண்டிப்பாக யோசிக்க வேண்டிய விஷயம் இது. நீ சொல்ல வருவது புரிகிறது. இந்த உலகம் இயங்குவதும் எனக்காகத்தான் என் உடல் இயங்குவதும் எனக்காகத்தான், அப்படித்தானே?”

“அத்துடன் முடியவில்லை. அதற்குமேல்தான் நீ சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளாய்.”

“ஒரு விஷயம் எனக்குப் புரிய வருகிறது. அதாவது நம்மை மீறிய ஒரு அபாரமான சக்தி ஒன்று இவற்றையெல்லாம் சமநிலையில் இயக்கி வருகிறது. அவனைத்தான் கடவுள் என்கிறோம், இல்லையா சலீம்?”

“நிச்சயமாக, மிகச் சரியாகச் சொன்னாய் சசி. அவன் உன் மீது எவ்வளவு அக்கறை கொண்டவன் எனபதை யோசித்துப் பார்த்திருக்கிறாயா?”

“என் மீது அதிக அக்கறை கொண்டவர்கள் என் பெற்றோர்கள் என்றுதான் நான் அறிவேன். அதிலும் குறிப்பாக என் தாய் என் மீது உயிரையே வைத்துள்ளாள்”

“சரி சசி, உன் தாய் உன்னை என்று முதல் கவனிக்கத் தொடங்கினார்? சொல் “

“நான் பிறந்த நாள் முதல்.”

“அதற்கு முன் யார் உன்னை கவனித்துக் கொண்டிருந்தது? நீ உன் தாய் வயிற்றினுள் பத்து மாதங்களாக குடியிருந்தபோது எந்தக் கவலைகளும் அறியாமலே இருந்தாய். உனக்கு அவ்வளவு பக்குவமாக மெத்தை

அமைத்து, உணவூட்டி, சீராட்டி கண்ணும் கருத்துமாக வளர்த்தது யார்?"

"ஒப்புக்கொள்கிறேன் சலீம், அது கடவுள்தான்"

"நீ பிறந்து வந்தபோது அழுவதைத் தவிர உனக்கு வேறு எதையுமே சுயமாகச் செய்யத் தெரியாது. அப்படிப்பட்ட பலவீனமான நிலையில் இருந்த உன்னை வரவேற்று உபசரித்து கவனித்துக் கொள்வதற்கு தாயையும் தந்தையையும் ஏற்பாடு செய்தவன் யார்? தாய்ப்பாலைச் சுரக்க வைத்தவன் யார்?"

" உண்மைதான் சலீம், கடவுள் தான்."

"உன் தாயின் உள்ளத்தில் பாசம் என்பது மட்டும் கடவுள் விதைத்திருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும் தெரியுமா?"

"புரிகிறது சலீம், நான் பத்து மாதம் தாய் வயிற்றினுள் இருந்து அவளுக்குக் கொடுத்த சித்திரவதைகளில் இருந்து விடுதலை பெறும் நாள் எனது பிறந்த நாள்! தாயினுள் பாசம் என்ற ஒன்று மட்டும் இல்லாமல் போயிருந்தால்... 'தொலைந்தது சனியன்!" என்று சொல்லி என்னைக் குப்பைத்தொட்டியில் எறிந்துவிட்டு போகவும் வாய்ப்புண்டு!"

"உனது தாயின் உள்ளத்தில் தாய்ப்பாசம் எனபதை ஏன் கடவுள் விதைத்தான் தெரியுமா? அவன் உன்னை நேசிக்கிறான் என்பதால்தான்."

"கடவுளைப் பற்றி சொல்லும்போது அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் என்று நீ அடிக்கடி சொல்வாயே. அது இப்போதுதான் புரிகிறது சலீம்."

"நபிகள் நாயகம் அவர்கள் சொன்னார்கள், "இறைவன் தனது கருணையை நூறு பாகங்களாகப் பிரித்தான். அதில் ஒரு பாகத்தை மட்டுமே இப்பூமியின் உள்ளோர் மீது விதைத்தான். இங்கு நாம் ஒருவரை ஒருவர் நேசிப்பதும் அதனால்தான். ஒரு தாய்ப் பறவை தன் குஞ்சின்மீது காட்டும் பாசமும் அதன் காரணமாகத்தான், எந்த அளவுக்கேன்றால், தன் குஞ்சின்மீது பட்டுவிடக்கூடாது என்பதற்காக தன் காலைத் தூக்கிக் கொள்கிறது தாய்ப் பறவை."என்று."

"அப்படியா சலீம்?"

"ஆமாம் சசி, யோசித்துப்பார்... மீதம் உள்ள 99 பாகங்களை அவன் வசமே வைத்துள்ளான் என்றுதானே அர்த்தம்? அப்படியென்றால் அவன் நம் மீது காட்டும் அன்பும் பாசமும் கற்பனையால் கூட அளந்து பார்க்க முடியுமா? அப்படிப்பட்டவன் தான் நம் இறைவன்!"

"கேட்ககேட்க மிக ஆச்சரியமாகவும் சந்தோ'மாகவும் இருக்கிறது சலீம்."

'ஆம் சசி, இதை உணர்ந்து வாழ்வதில்தான் வாழ்கையின் வெற்றியே உள்ளது"

"சரி சலீம் .அந்தக் கருணையுள்ள இறைவன் எதற்காக நம்மைப் படைத்துள்ளான்?"

"மீண்டும் நாம் பேச்சைத் தொடர்ந்தால் நேரமாகிவிடும். நாளை மீண்டும் தொடர்வோம் இன்ஷாஅல்லாஹ் - அதாவது இறைவன் நாடினால்......, அது வரை ஒன்று செய் ரவி, உன் கேள்விக்கான பதிலைப் பற்றி நீயும் யோசி. அதற்குத்தானே இறைவன் பகுத்தறிவைத் தந்திருக்கிறான்"

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Registered under Postal Regn. No. KRNA/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, Mysore Road , Bangalore 560026 on 25th or 26th or 27th of every month. No. of Pages: 24+4
Licenced to post without prepayment . License No. WPP-308
Date of Publication: 25th of every month

(PRINTED MATTER)

To

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

# அழகிய பிரார்த்தனை

இறைத்துதர்(ஸல்) அவர்கள் (பயணத்தில்) தங்கும்போதெல்லாம் 'அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மினல் ஹம்மி, வல்ஹஸனி, வல் அஜ்ஸி, வல்கஸலி, வல்புக்லி, வல்ஜுப்னி, வ ளலஇத் தைனி, வ ஃகலபத்திர் ரிஜால்' என்று அதிகமாகப் பிரார்த்திப்பதை செவிமடுத்துவந்தேன்.

பொருள்: இறைவா! (வருங்காலத்தைப் பற்றியக்) கவலையிலிருந்தும், (நடந்து முடிந்துவிட்டவை பற்றிய) துக்கத்திலிருந்தும், இயலாமையிலிருந்தும், சோம்பலிலிருந்தும கஞ்சத்தனத்திலிருந்தும், கோழைத்தனத்திலிருந்தும், கடன் சுமையிலிருந்தும், பிற மனிதர்களின் அடக்கு முறைகளிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.

அறிவிப்பாளர் : அனஸ் இப்னு மாலிக்(ரலி) நுல் – புகாரி